IndiaFirst
LIFE INSURANCE

**Publication: Dinamani** **Date: Sunday, 8th March, 2015**

**Edition: Chennai**

# இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீடு நிறுவனம்: நிர்வாக இயக்குநராக ஆர்.எம்.விசாகா நியமனம்



மும்பை, மார்ச் 7: இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீடு நிறுவனத்தின் புதிய நிர்வாக இயக்குநர் - தலைமைச் செயல் அதிகாரியாக ஆர்.எம். விசாகா நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுத் துறையைச் சேர்ந்த பரோடா வங்கி, ஆந்திரா வங்கி ஆகியவற்றுடன் பிரிட்டனின் லீகல் அண்ட் ஜெனரல் நிதி நிறுவனம் இணைந்து அமைக்கப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிறுவனம், இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீடு நிறுவனம். நடப்பு நிதி ஆண்டின் முதல் அரையாண்டு அளவில், சுமார் 27 லட்சம் வாடிக்கையாளர்களுடன், ரூ. 7,500 கோடி மதிப்பிலான நிதியை இந்நிறுவனம் நிர்வகித்தது. இந்நிறுவனத்தின் புதிய நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக ஆர்.எம். விசாகா நியமிக்கப்பட்டுள்ளார் என நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.